**TAMIL NADU POLICE**
**INTEGRATED INVESTIGATION FORM-I**

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110231

1. District : மாவட்டம் கிருஷ்ணகிரி  PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு  Year: ஆண்டு 2021  FIR No.: மு.த.அ. எண் 8/AC/2021  Date: நாள் 30.10.2021.

2. (i) Act சட்டம்: 1988-ம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டம் 2018-ல் திருத்தியமைக்கப்பட்டது.  Sections பிரிவுகள்: 7(a), 12 r/w 13(1)(a).
   (ii) Act சட்டம்: குற்ற விசாரணை முறைச் சட்டம்.  Sections பிரிவுகள்: 102
   (iii) Act சட்டம்: இந்திய தண்டனைச் சட்டம்.  Sections பிரிவுகள்: 109.
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 29.10.2021
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை பகல் 12.50 மணிக்கு முன்பு
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்  Time : நேரம் 29.10.2021
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம் 12.50 மணி.

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக தன்னிச்சையாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 55 கி.மீ. வடக்கே
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி வட்டார போக்குவரத்து (வெளிவரும்) சோதனைச் சாவடி, ஜூஜுவாடி, ஓசூர்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் அ.சி. ஜெயம் ராஜ்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அ. தியாகராஜன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.06.1973  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர்  (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. T. கிளமண்ட் அந்தோணி, வயது-41, மோட்டார் வாகன ஆய்வாளர் (நி.அ),
   2) திரு. M. மாதேஸ்வரன், வயது-57, அலுவலக உதவியாளர், வட்டார போக்குவரத்து (வெளிவரும்) சோதனைச் சாவடி, ஜூஜுவாடி, ஓசூர்.
   3) திரு. R. நாகராஜமணி, வயது-47, த/பெ. இ. ராமசாமி, க.எண். 3/433-A, அம்பேத்கர் கிராமம், ஓசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம். தமிழ்நாடு.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   தாமதமில்லை.

9. Particulars of properties stolen / Involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.2021 / 07.20 மணி.

Name: பெயர் [illegible]
Rank: நிலை காவல் துணை கண்காணிப்பாளர், திருச்செந்தூர். No. எண் ..........

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 8/AC/2021 U/s 7(a), 12 r/w 13(1)(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 102 Cr.P.C and 109 IPC வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்-12 ன் தொடர்ச்சி.**

29.10.2021 ஆம் தேதி மதியம் 12.50 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்தபோது கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் வட்டார போக்குவரத்து வெளிவழி சோதனைச்சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும் விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின்படி அரசு சாட்சிகள் திரு.J.வெற்றிவேல், துணை வட்டாட்சியர் (தேர்தல்), வட்டாட்சியர் அலுவலகம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் திரு.R.முருகேசன், வருவாய் ஆய்வாளர், பேரிகை உள்வட்டம், சூளகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர் முன்னிலையில் 29.10.2021 ஆம் தேதி மதியம் 14.00 மணி முதல் இரவு 22.00 மணி வரை அந்த வெளிவழி சோதனை சாவடி என்னால் ஒரு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது சோதனை சாவடியின் வடமேற்கு மூலையில் கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்து கொண்டு வாகன ஓட்டிகளிடம் ஒரு நபர் பணம் வசூல் செய்து கொண்டிருந்தார். அவரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் R.நரசிம்மன் என்றும், மேற்படி சோதனை சாவடியின் உதவியாளர் திரு.சீனிவாசன் என்பவர் விடுப்பில் உள்ளதால் அவருக்கு பதிலாக கணினியில் பணிபுரிய தன்னை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி அவர்கள் பணிக்கு வரச்சொன்னதால் காலை சுமார் 09.00 மணிக்கு சோதனை சாவடிக்கு வந்து வாகன ஓட்டிகளிடமிருந்து அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் பணம் வசூல் செய்யப்படும் பணியினை செய்துவருவதாக தெரிவித்தார். பின்னர் அந்த திடீர் சோதனையின் போது மோட்டார் வாகன ஆய்வாளராக பணியிலிருந்த திரு.T.லியோ அந்தோனி அவர்கள் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 29.10.2021 ஆம் தேதி காலை 8 மணி முதல் மதியம் சுமார் 14.00 மணி வரையில் வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.13,850/- என்று ஆஜர்படுத்தினார். மேற்படி தொகை அரசு சாட்சிகளால்

சரிபார்க்கப்பட்டு, அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பிறகு மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தனது இருக்கையின் முன்புறம் இருந்த இரும்பினாலான மேசையின் இடதுபக்க டிராயரிலிருந்து பணம் ரூ.15,000/- எடுத்து ஆஜர் செய்தார். அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன ஓட்டுனர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் வாகன ஓட்டுநர்களால் கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அலுவலக உதவியாளர் திரு.M.மாதேஸ்வரன் அவர்களின் இருக்கை முழுவதும் சோதனை செய்யப்பட்டதில் அவரது இருக்கைக்கு முன் இருந்த மர டேபிளின் மீது ஸ்ரீ வராகி பைரவர் திருக்கல்யாணம் என்று அச்சிடப்பட்ட கோவில் திருவிழா பத்திரிக்கையின் நடுவே பணம் ரூ.21,860/- இருந்தது. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் வாகன ஓட்டுனர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட பணம் என்று தெரிவித்தார். அந்த பணம் வாகன ஓட்டுநர்களால் கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்படி சோதனை சாவடிக்கு அடுத்து கிழக்கே வடக்கு முகம் பார்த்தவாறு இருந்த சோதனை சாவடியின் ஆவணங்கள் வைக்கப்பட்டிருந்த இருப்பு அறையினை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில் சோதனை செய்ததில், அந்த அறையின் தெற்குபுற சுவற்றை ஒட்டி இருந்த Steel rack-ன் மேலிருந்து கீழாக இரண்டாவது Rack-ல் கிழிந்த நிலையிலிருந்து ஆவணங்கள் வைக்கும் File இரண்டு இருந்தது. அதில் ஒரு file-யை சோதனை செய்தபோது அதில் 29.10.2021 ஆம் தேதியிட்ட தினகரன் நாளிதழின் முதல் பக்க பேப்பர் மடிக்கப்பட்ட நிலையில் பணம் ரூ.25,000/- இருந்தது. அந்த தொகை குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி அவர்களிடம் கேட்க, அந்த பணம் எப்படி வந்தது என்று தெரியாது என்றும் கூறினார்.

பின்னர் அலுவலக உதவியாளர் திரு.M.மாதேஸ்வரன் அவர்களை காவலர் மூலம் வரவழைத்து அவரிடம் மேற்படி பணம் குறித்து கேட்க, அவரும் மேற்படி பணம் பற்றி தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். அவர்கள் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இல்லாததாலும், மேற்படி பணம் வாகன ஓட்டிகளிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் நடைச்சீட்டில் சீல் போடுதல், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருத்தல், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காக கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்பதால் மேற்படி பணம் ரூ.25,000/- மற்றும் 29.10.2021 ஆம் தேதியிட்ட தினகரன் நாளிதளின் முதல் தாள் ஆகியவற்றை செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு மற்றொரு file சோதனை செய்தபோது அதில் காக்கி நிற காகித கவரில் பணம் ரூ.22,300/- இருந்தது. அந்த தொகை குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி அவர்களிடம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்க, அந்த பணம் எப்படி வந்தது என்று தனக்கு தெரியாது என்று கூறினார். பின்னர் அலுவலக உதவியாளர் திரு.M.மாதேஸ்வரன் அவர்களிடம் மேற்படி பணம் குறித்து கேட்க, அவரும் மேற்படி பணம் பற்றி தனக்கு தெரியாது என்று தெரிவித்தார். அவர்கள் சொன்ன விளக்கம் ஏற்க தக்க வகையில் இல்லாததாலும், மேற்படி பணம் வாகன ஓட்டிகளிடமிருந்து மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் நடைச்சீட்டில் சீல் போடுதல், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருத்தல், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காக கையூட்டாக பெறப்பட்ட பணமாக இருக்கக்கூடும் என்பதால் மேற்படி பணம் ரூ.22,300/- மற்றும் காக்கி நிற காகித கவர் ஆகியவற்றை செயல்முறை நடவடிக்கையின்போது என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு அரசு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலக வருகைப்பதிவேடு, பணப் பதிவேடு, 1 சதவிகித வரி பதிவேடு, வங்கி பணம் செலுத்தும் பதிவேடு, பணம் கையிருப்பு பதிவேடு, கொடிநாள் வசூல் பதிவேடு, வசூல் அட்டவணை, வாகனம் நடமாட்ட பதிவேடு மற்றும் ஓசூர் வட்டார போக்குவரத்து அலுவலக வெளிவழி சோதனை சாவடியின் அலுவலர்களுக்கான அக்டோபர் மாத அலுவல் விவரம் குறித்து ஓசூர் வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ஆகிய பதிவேடுகள் என்னால் பார்வையிடப்பட்டு அந்த ஆவணங்களின் 29.10.2021 ஆம் தேதிக்குண்டான பக்கங்கள் ஒளி நகல்கள் எடுக்கப்பட்டு அவற்றில் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி

அவர்களின் கையொப்பம் பெறப்பட்டது. அந்த ஆவணங்கள் தொடர் விசாரணைக்காக என்னால் மகஜரில் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக 29.10.2021 ஆம் தேதியன்று மதியம் 14.00 மணி முதல் இரவு 22.00 மணிவரையில் என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது. அதன் நகலை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி அவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி மற்றும் அலுவலக உதவியாளர் திரு.M.மாதேஸ்வரன் ஆகியோரின் செயல்பாடுகளானது, அவர்கள் ஒரு பொது ஊழியராக இருந்து கொண்டு தங்களுடைய கடமையினை முறையற்ற வகையிலும் நேர்மையற்ற முறையிலும் செய்வதற்கோ அல்லது செய்யாமலிருக்வோ தனி நபரான திரு.R.நரசிம்மன் அவர்களின் மூலமாக வாகன ஓட்டிகளிடமிருந்து பணத்தை தகாத அனுகூலமாக பெற்றுள்ளார்கள். மேலும், தனி நபரான திரு.R.நரசிம்மன் அவர்களை மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் எந்த வித அரசு ஆணையுமின்றி அரசு பணத்தை கையாளவும், அரசு ஆவணங்களை பராமரிக்கவும் அனுமதித்திருக்கிறார். மேலும், தனி நபரான திரு.R.நரசிம்மன் அவர்கள் வாகன ஓட்டிகளிடமிருந்து பணத்தை தகாத அனுகூலமாக பெற்று அதை பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.T.லியோ அந்தோனி மற்றும் சோதனை சாவடி அலுவலர்கள் கொடுக்க உடைந்தையாக இருந்துள்ளார். ஆகவே இன்று 30.10.2021 ஆம் தேதி காலை 06.00 மணிக்கு அலுவலகம் வந்து கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 8/AC/2021 u/s 7(a), 12 r/w 13(1)(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 and 102 Cr.P.C and 109 IPC-ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலையும், கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் படிவம் 91 ன் மூலமாக கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

30.10.2021

காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
கிருஷ்ணகிரி